# Telephone Conversation between Prime Minister Shri Narendra Modi and H.E. Boris Johnson, Prime Minister of the United Kingdom

**March 12, 2020**

# பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடிக்கும் இங்கிலாந்து பிரதம மந்திரி மேன்மை பொருந்திய போரிஸ் ஜான்சன் அவர்களுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்.

**மார்ச் 12, 2020**

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி இங்கிலாந்து பிரதம மந்திரி மேன்மை பொருந்திய போரிஸ் ஜான்சன் அவர்களிடம் இருந்து இன்று தொலைபேசி அழைப்பு வரப் பெற்றார்.

இரு தலைவர்களும் புதிய தசாப்தத்தில் இந்தியா- இங்கிலாந்து மூலோபாய பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்த விருப்பம் தெரிவித்தனர். இந்த நோக்கத்தை நோக்கி ஒரு விரிவான பாதை வரைபடத்தை உருவாக்குவது பயனுள்ளதாக இருக்கும் என்று அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

காலநிலை மாற்றத் துறையில் இந்தியாவிற்கும் - இங்கிலாந்துக்கும் இடையிலான ஒத்துழைப்புக் குறித்து தலைவர்கள் தங்கள் திருப்தியை வெளிப்படுத்தினர். குறிப்பாக பேரிடர் தடுப்பு உள்கட்டமைப்புக்கான கூட்டணி (சிடிஆர்ஐ) குறித்து இந்த ஆண்டு இறுதியில் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள சிஓபி-26 க்கு அழைப்பு விடுத்ததற்கு பிரதமர் ஜான்சனுக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார்.

Covid-19 பெருந்தொற்றைப் பற்றி இரு பிரதமர்களும் தங்களது கருத்தைப் பரிமாறிக் கொண்டனர் இங்கிலாந்து சுகாதார அமைச்சர் செல்வி.நாடின் டோரீஸ் கொரோனா வைரசுக்கு நேர்மறையாக சோதனைச் செய்யப்பட்டதை குறித்து கவலை தெரிவித்த ஸ்ரீ மோடி, அவர் விரைந்து குணமடைய வாழ்த்துத் தெரிவித்தார்.

பரஸ்பர வசதியான தேதிகளில் இந்தியாவிற்கு வருகை தருமாறு திரு. ஜான்சனுக்கு தனது அழைப்பை பிரதமர் மோடி மீண்டும் வலியுறுத்தினார். .

**நியூ டெல்லி**
**மார்ச் 12, 2020**

**DISCLAIMER : This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.**